ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ மான் கொண்ட ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மான் கொண்ட ॥

திருநறையூர் - 5

‡மான் கொண்ட தோல்⋆ மார்வின் மாணியாய்⋆ மாவலி மண்
தான் கொண்டு⋆ தாளால் அளந்த பெருமானை⋆
தேன் கொண்ட சாரல்⋆ திருவேங்கடத்தானை⋆
நான் சென்று நாடி⋆ நறையூரில் கண்டேனே (1)

முந்நீரை முன் நாள்⋆ கடைந்தானை⋆ மூழ்த்த நாள்
அந்நீரை மீனாய்⋆ அமைத்த பெருமானை⋆
தென்னாலி மேய⋆ திருமாலை எம்மானை⋆
நன்னீர் வயல் சூழ்⋆ நறையூரில் கண்டேனே (2)

தூ வாய புள்ளூர்ந்து வந்து⋆ துறை வேழம்⋆
மூவாமை நல்கி⋆ முதலை துணித்தானை⋆
தேவாதி தேவனைச்⋆ செங்கமலக் கண்ணானை⋆
நாவாயுளானை⋆ நறையூரில் கண்டேனே (3)

ஓடா அரியாய்⋆ இரணியனை ஊன் இடந்த⋆
சேடார் பொழில் சூழ்⋆ திருநீர் மலையானை
வாடா மலர்த்துழாய்⋆ மாலை முடியானை⋆
நாடோறும் நாடி⋆ நறையூரில் கண்டேனே (4)

கல்லார் மதில் சூழ்⋆ கடியிலங்கைக் கார் அரக்கன்⋆
வல்லாகம் கீள⋆ வரி வெஞ்சரம் துரந்த
வில்லானை⋆ செல்வ விபீடணற்கு⋆ வேறாக⋆
நல்லானை நாடி⋆ நறையூரில் கண்டேனே (5)

உம்பர் உலகோடு⋆ உயிர் எல்லாம் உந்தியில்⋆
வம்பு மலர்மேல்⋆ படைத்தானை மாயோனை⋆
அம்பன்ன கண்ணாள்⋆ அசோதை தன் சிங்கத்தை⋆
நம்பனை நாடி⋆ நறையூரில் கண்டேனே (6)

கட்டேறு நீள் சோலைக்⋆ காண்டவத்தைத் தீ மூட்டி
விட்டானை⋆ மெய்யம் அமர்ந்த பெருமானை⋆
மட்டேறு கற்பகத்தை⋆ மாதர்க்காய்⋆ வண் துவரை
நட்டானை நாடி⋆ நறையூரில் கண்டேனே (7)

மண்ணின் மீ பாரம் கெடுப்பான்⋆ மற மன்னர்⋆
பண்ணின்மேல் வந்த⋆ படையெல்லாம் பாரதத்து⋆
விண்ணின் மீதேற⋆ விசயன் தேர் ஊர்ந்தானை⋆
நண்ணி நான் நாடி⋆ நறையூரில் கண்டேனே (8)

பொங்கேறு நீள் சோதிப்⋆ பொன்னாழி தன்னோடும்⋆
சங்கேறு கோலத்⋆ தடக் கைப் பெருமானை⋆
கொங்கேறு சோலைக்⋆ குடந்தைக் கிடந்தானை⋆
நங்கோனை நாடி⋆ நறையூரில் கண்டேனே (9)

‡மன்னு மதுரை⋆ வசுதேவர் வாழ் முதலை⋆
நன்னறையூர்⋆ நின்ற நம்பியை⋆ வம்பவிழ் தார்
கன்னவிலும் தோளான்⋆ கலியன் ஒலி வல்லார்⋆
பொன்னுலகில் வானவர்க்குப்⋆ புத்தேளிர் ஆகுவரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥